*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – IV, Issue – 1
November - 2019

# சமூக மாற்றத்தில் கள், வரைவின் மகளிர்

சக்திலீலா.கு,
உதவிப்பேராசிரியர், தமிழியல்துறை
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.
தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding Author: sakthileelak@gmail.com**

## முன்னுரை

இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்த இனக்குழு சமுதாயத்தில் சங்கத்தமிழர்கள் காதலையும் வீரத்தையும் முதன்மையாகப் போற்றினர். அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களும் இவ்வுணர்வுகளையே மிகுதியாகப் பதிவுசெய்தன. இனக்குழு சமுதாயத்தில் தற்காப்பிற்காகப் போரில் மிகுதியாக ஈடுபட்டனர். அதற்கான உடல் வலிமையை அதிகரிக்க அவர்களின் உணவில் ஊன்உணவும் கள்ளும் முதன்மையிடம் பெற்றன. ஒருவன் ஒருத்தியோடு மட்டுமே வாழவேண்டும் என்ற கட்டுப்பாடும் அச்சமூகத்தில் இல்லை. ஊடலை உரிப்பொருளாகக் கொண்ட மருதநிலத்தில் பரத்தையிற்பிரிவு தவறான ஒன்றாகக் கருதப்பெறவில்லை. இவை மூன்றும் சங்கம் மருவிய காலத்தில் தவறான பழக்கமாகப் பழிக்கப்பெற்றன. அம்மாற்றத்திற்கான காரணங்களை இலக்கியங்களின் வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சங்க இலக்கியத்தில் கள்

இலக்கியங்களில் கையாளப்படும் சொற்கள் கூடச் சமுதாயத்தின் பழக்கத்தைப் பிரதிபலிப்பதாக அமையும். அந்தவகையில் சங்க இலக்கியத்தில் கள்ளைக் குறிப்பதற்கு, ‘தேறல், நறவு, தோப்பி, கள், மது, மட்டு, அரியல், தெளியல், பிழியல்’ போன்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். ‘தோப்பி’ என்ற ஒரு வகை நெல்லைக் கொண்டு தயாரிக்கப்படும் கள் ‘தோப்பிக்கள்’ என அழைக்கப்பெற்றது. இந்நெல்லைக் கொண்டு கள் தயாரிக்கும் முறையை பெரும்பாணாற்றுப்படையும் (275-281), சிறுபாணாற்றுப்படையும் (155-159) விவரிக்கின்றன.

தேனை மூங்கில் குழாயில் நிரப்பி மண்ணில் புதைத்து வைத்தும் (பதி.8:26,

திருமுரு.195, மலை.171,522, அகம்.348:6-7) கள்ளை உருவாக்கினர்.

“நிலம்புதைப் பழுதிய மட்டின் தேறல்
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து”
(புறம்.120)

என்னும் பாடலடிகள் தேனைக் கொண்டு கள் உருவாக்கியமைக்கு சான்றாவதுடன் இனக்குழுச் சமுதாயத்தில் கள்ளும் பகிர்ந்து உண்ணும் உணவுப்பொருளாக இருந்தமை தெளிவாகிறது.

புலவர்கள் ஊரின் வளத்தை விளக்குமிடங்களில் கள்ளையும் இணைத்துப்பாடியுள்ளனர்.

“இன்கடும் கள்ளின் ஆமூர்” (புறம்.80)
“இன்கடும் கள்ளின் இழையணி நெடுந்தேர்
கொற்றச் சோழர்” (நற்.10)

மன்னனை வாழ்த்தும் போது யவன நாட்டில் இருந்து பெற்ற கள்ளை உண்பவன் (புறம்.56) எனப் பாராட்டுகிறது. மாங்குடி மருதனாரும் பாண்டியன் நெடுஞ்செழியனை,

“ஒண்தொடி மகளிர் பொலங்கலத் தேந்திய
தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி” (மதுரை.24)

என வாழ்த்துவதைக் காணமுடிகிறது. பாரியைப் புகழும்போது கபிலர் அவன் பாணருக்கு வழங்கிய கள் வழிந்து மலையில் இருந்த கல்லை எல்லாம் உருட்டிக் கொண்டு அருவி போல வீழ்ந்ததாகப் (புறம்.115) பாடியுள்ளார். அதியமானின் இறப்பிற்கு வருந்திப்பாடும் ஔவையார் அவன்தனக்கு கள் வழங்கிய முறையை எண்ணுகிறார்.

“சிறியகட் பெறினே எமக்குஈயும் மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாட தான்மகிழ்ந்து உண்ணும் மன்னே”
(புறம்.235:1-3)

மன்னன் தன்னை நாடிவரும் இரவலர்களுக்கு நடந்து வந்த துன்பம் தீரும்படி கள் வழங்கியமைக்கு ஆற்றுப்படை இலக்கியங்களில் காணப்பெறும் மன்னர்களின் விருந்தோம்பல் பகுதிகள் சான்றாகின்றன.

பகைவரை வென்ற மகிழ்ச்சியைக் கள்ளுண்டு கொண்டாடும் வழக்கத்தை ‘உண்டாட்டு’ என இலக்கியம் குறிப்பிடுகிறது. ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் (290) மன்னன் போருக்கு முன்னும் பின்னும் வீரர்களை ஊக்கப்படுத்த கள் வழங்கியதைக் குறிப்பிடுகிறது.

சங்கச் சமுதாயத்தைக் காட்டும் சங்கப்பாடல்கள் சங்கச் சமுதாயத்தில் கள் உண்ணுதல் (அறமல்லாத செயலாக) பாவச் செயலாகப் பழிக்கப்பெறாமையைப் புலப்படுத்துகிறது.

**சங்க இலக்கியத்தில் பரத்தை**

மருதத்திணைக்குரிய ஒழுக்கமாகக் கூறப்பெறுவது தலைமக்களிடையேயான ஊடலாகும். ஊடலுக்கான காரணமாக மருதத்திணைப் பாடல்களில் புலவர்கள் பரத்தையைக் கூறியுள்ளனர். தலைவன்

பேசும் இடங்களைக் குறிப்பிடும் போது தொல்காப்பியர்,

"காமக்கிழத்தி மனையோள் என்றிவர்
ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்"

(தொல்.கற்.7)

எனக் குறிப்பிடுகிறார். இந்த நூற்பா அடிகள் ஒருவனுக்கு மணம்புரிந்த மனைவியுடன் வேறு மனைவிமார்களும் உண்டு என்பதைப் புலப்படுத்துகிறது. 'காமக்கிழத்தி' எனத் தொல்காப்பியர் பரத்தையைச் சுட்டும் இடத்திற்கு விளக்கம் தரும் இளம்பூரணர், "காமக்கிழத்தியராவர் பின்முறை ஆக்கிய கிழத்தியர். அவர் மூவகைப்படுவர் ஒத்த கிழத்தியாரும் இழிந்த கிழத்தியாரும் வரையறுக்கப்பட்டாரும் என ஒத்த கிழத்தியர் முந்துற்ற மனையாளன்றிக் காமம் பொருளாகப் பின்னுந்தன் குலத்துள்ளாள் ஒருத்தியை வரைதல்" (தொல்.பொருள்.ப.288) என்கிறார். இதில் 'ஒத்தகிழத்தியர்' எனச் சுட்டப்பெறுபவர் தலைவனின் இரண்டாவது மனைவியைக் குறிக்கிறது. எனினும் இவளுக்கு குழந்தை இருந்தமைக்கான பாடல் சான்று சங்க இலக்கியத்தில் இல்லை. மேலும்,

"கற்புவிப் பட்டவள் பரத்தையை ஏத்தினும்
உள்ளத்தூட லுண்டென மொழிப"

(தொல்.பொருளியல்.36)

என்ற நூற்பா தலைவி உள்ளத்தில் ஊடல் இருந்தாலும் தலைவனுக்காக பரத்தையைப் பாராட்ட வேண்டும் என்கிறது. ஐங்குறுநூற்றில் இதேபோல் தலைவன் மணம்முடித்து வந்த பெண்ணைத் தலைவி,

"நின்னினும் சிறந்தனள் எமக்கு நீநயந்து
நன்மனை அருங்கடி அயர எம்நலன் சிறப்ப
யாம்இனிப் பெற்றோளே"

(ஐங்கு.292)

எனப் பாராட்டி ஏற்கும் சூழலை இப்பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன.

பரத்தை வீட்டிற்குச் சென்று வந்த தலைவனை அவன் சுற்றத்தார் இடித்துரைத்ததாகப் பாடல்கள் இல்லை. தோழி தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தை,

"உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும்
தழைஅணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழவொடு வருதி நீயே" (குறுந்.295)

எனக் கடிந்துரைப்பதைப் போன்ற பல பாடல்கள் சங்க இலக்கியத்தில் உள்ளன. தோழி தலைவனைக் கடிந்துரைத்தாலும் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தால் அவனைப் பிரிந்தால், 'உண்ண உணவின்றி குழந்தைக்குப் பாலூட்டக் கூட முடியாத வறுமைநிலை ஏற்படும் ஆகையால் ஊடலைக் கைவிடுவாயாக' என அறிவுறுத்துவதையும் காணமுடிகிறது.

"பரத்தைமை தாங்கலோ இலென்னன வறிதுநீ
புலத்தல் ஒல்லுமோ மனைகெழு மடந்தை
-------------------------------------------------------------
வைகுநர் ஆகுதல் அறிந்தும்
அறியார் அம்ம அஃது உடலுமோரே"

(அகம்.316:10-17)

இதன்வழி சங்ககாலச் சமூகத்தில் ஆண் பிறபெண்களோடு தொடர்பு கொள்வது

சமூகத்தால் அங்கீகரிக்கப் பெற்றதாக இருந்தமை தெளிவாகிறது.

## அரசியல் மாற்றம்

கடைச்சங்க காலத்தில் இருந்த அரசர்களும் குறுநிலமன்னர்களும் காரணமின்றித் தங்களின் வலிமையை நிலைநாட்ட தங்களுக்குள் போரில் ஈடுபட்டுவந்தனர். தமிழகத்தின் வடபகுதியில் புதிதாக சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்கு பெறத்தொடங்கியது. தென்பகுதியில் இச்சமயங்கள் பரவத்தொடங்கியமைக்கு இச்சமயங்களின் கொள்கைகளை உள்ளடக்கி எழுதப்பெற்ற காப்பியங்கள் (சிலப்பதிகாரம், மணிமேகலை) சான்றாகின்றன. கி.பி.2ஆம் நூற்றாண்டு எனச் சொல்லப்பெறும் சங்கம் மருவிய காலத்தில் சமயம் மற்றும் அரசியல் தொடர்பாக ஏற்பட்ட குழப்பமான சூழலில் மைசூர் மாநிலத்தில் உள்ள சரவணபெலகுலா பகுதியில் இருந்து களப்பிரர்கள் வந்தனர். “கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நிலவி வந்த அரசியல் சூழ்நிலை கன்னடநாட்டின் களப்பிரா் குலத்தவர் தமிழ் மண்மீது படையெடுத்துவரச் சாதகமாக அமைந்திருந்தது” என்னும் டி.கே.ரவீந்திரன் கூற்று அரசியல் மாற்றத்திற்கான காரணத்திற்குச் சான்றாகிறது.

## மொழியும் இலக்கியமும்

தமிழகத்தைக் கைப்பற்றிய களப்பிரர்கள் வேற்றுமொழியைச் சார்ந்தவர்கள். இவர்கள் வடமொழி, பாலி, பிராகிருதம் போன்ற மொழிகளையே அறிந்தவர்களாக இருந்தமையால் அம்மொழிகளையே ஆதரித்தனர். இவர்களால் தங்கள் சமயம் ஏற்கப்படவேண்டும் என சமண, பௌத்த சமயவாதிகள் எண்ணினர். சமணர் சூரசேனி என்னும் பிராகிருத மொழியிலும் பௌத்தர் பாலி மொழியிலும் தங்கள் சமயக்கருத்துக்களை எழுதினர். இவர்கள் தங்களின் சமயக்கருத்துக்களைக் கூறும் இம்மொழிகளை ‘தெய்வபாசை’’ எனக் கூறிக்கொண்டனர்.

இலக்கியங்களின் பாடுபொருளாக இருந்த அகம், புறக்கருத்துகளில் மாற்றம் ஏற்பட்டன. புறப்பகையை வெல்வதைப் புகழுவதைவிட ஐம்புலன்களை அடக்கி வெல்வதற்கான வழிமுறைகளை எடுத்துரைப்பது இலக்கியங்களின் பாடுபொருளாக மாற்றம் பெற்றன. துறவை வலியுறுத்திய சமயங்களின் செல்வாக்கே இப்பொருண்மை மாற்றத்திற்கான காரணமாகும்.

சமயங்கள் நாடுகளில் பரவும்போது சமயம் கூறும் அறங்கள் நாட்டின் சட்டமாக விரிவடைவதோடு வாழ்வியல் அறமாகவும் மாற்றம்பெறும். அந்தவகையில் சமண பௌத்த சமயங்களின் அறங்கள் வாழ்வியல் அறமாகக் கூறப்பெற்றன எனலாம். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளைத் தவிர ஏனைய நீதிநூல்கள் சமயக்கருத்துக்களையே அறமாக விளக்கியுள்ளன.

## வரைவின் மகளிர்

சங்க இலக்கியத்தில் தலைவனின் பரத்தையிற் பிரிவால் வருந்தும் தலைவி,

"கண்ணின் காணா நண்ணுவழி இருந்தும்
கடவுள் நண்ணிய பாலோர் போல"
(குறுந்.203:3-4)

தலைவன் சேரியில் இருந்தும் கடவுளை நெருங்க இயலாதவரைப் போல அவனை நெருங்க இயலாத்தன்மையைக் கூறுகிறாள். மற்றொரு தலைவி,

"ஏதிலார் சுடலை போலக்
காணக் கழிப மன்னே" (குறுந்.231:3-4) என

முன்பின் அறியாதவர்களின் உடல் எரிவதைக் காணவிரும்பாதவரைப் போலத் தலைவன் தன்னை பார்க்க விரும்பாதவனாக இருப்பதைக் குறிப்பிடுகிறாள். இங்ஙனம் பெண்கள் தலைவனின் புறத்தொழுக்கத்தால் வருந்தும் நிலையைச் சங்க இலக்கியங்கள் வழி அறிந்த வள்ளுவர் பெண்ணைக் காமப்பொருளாகவும் வாழ்க்கையையே காமவாழ்க்கையாகக் கொண்ட சமூகநிலையை மாற்ற எண்ணி வரைவின் மகளிர் அதிகாரத்தில் பரத்தமையைப் பழிக்கின்றார்.

பரத்தையர் பொருளுக்காகத் தன்னையே விற்பவர்கள் என்பதால் அவர்களை, 'பொருட் பெண்டிர், பொருட்பொருளார், இருமனப் பெண்டிர், வரைவின் மகளிர்' எனக் குறிப்பிட்டுள்ளார். பொருளையும், சிறப்பையும் இழப்பதற்குரிய வழிகளில் ஒன்றான பரத்தமையை அறிவுடையோர் நாடமாட்டார். பொருட் பெண்டிர், பொருளை மட்டுமே எதிர்பார்த்து ஒருவனிடம் அன்பு காட்டுவர். ஆதலால், அவர்களோடான தழுவல்,

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்இட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று" - குறள், 913

என வன்மையாகச் சாடுகின்றார். சங்க இலக்கியங்கள் தலைமக்களிடையேயான ஊடலுக்குக் காரணமாகத் தலைவனின் பரத்தை ஒழுக்கத்தைச் சுட்டுகின்றது. இதற்கு மாறாகத் திருக்குறள் காமத்துப்பாலில் வள்ளுவர் தலைமக்களுக்கிடையேயான ஊடலுக்குப் பரத்தையிற் பிரிவினைக் காட்டாமை அவர் செய்த புதுமையாகும்.

நாலடியாரைப் பதுமனார் திருக்குறளின் அமைப்பைப் பின்பற்றித் தொகுத்துள்ளார். அதில் உள்ள காமத்துப்பால் பகுதி அகக்கருத்துக்களைப் பெற்றிருக்கவில்லை. அதில் பரத்தையர் தொடர்பு பழிக்கப்படுகிறது. கற்புடைய பெண்களுக்கான பண்புகள் சுட்டப்படுகிறது. பரத்தையர்கள் பொருள் இருக்கும் வரை மட்டுமே அன்புகாட்டுவர் (நாலடி.372), சேர்ந்திருப்பர் (நாலடி.380), கடவுளாக இருந்தாலும் பொருள் இருந்தால் மட்டுமே வரவேற்பர் (நாலடி.373) என்றும் சான்றோர்கள் பரத்தையரோடான தொடர்பை நினைத்துக்கூட பார்க்கமாட்டார்கள் (நாலடி.378) என்றும் கூறுகிறது.

இனியவை நாற்பது பரத்தையரை வி'ம் (37) என்கிறது. உரிமையில்லாத இந்த மகளிரை விரும்புவது மூடர் செயல் (திரி.9), பரத்தையரின் இன்சொல் நரகத்தில்

தள்ளிவிடும்(திரி.24) நல்வழி செல்லாதவர்களின் செயல் (திரி.39) எனப் பரத்தமையை திரிகடுகம் பழிக்கிறது.

**கள்ளுண்ணாமை**

தமிழா் உணவில் தவறாது இடம்பெற்ற 'கள்' பற்றிய மாற்றுக் கருத்து சங்கம் மருவிய காலத்தில் தோன்றியது. திருக்குறள் 'கள்ளுண்ணாமை' அதிகாரமே அதற்கான சான்றாகும். கள் உண்பது நஞ்சை உண்பதற்குச் சமம். கள்ளுண்பவனைத் தாயும் மதிக்கமாட்டாள். வீரம் (921), மான உணா்வு (924), அறிவினைப் போற்றும் (922) நம் தமிழ்ச் சமுதாயத்தில் கள்ளுண்ணும் வழக்கம் இருப்பின் நம்முடைய போற்றுதலுக்குரிய பண்புகள் இல்லாது போகும் என்பதையும் கள்ளுண்ணாமை அதிகாரத்தில் எடுத்தியம்பியுள்ளாா். க.ப.அறவாணன் 'திருவள்ளுவம்' என்னும் நூலில் "கள்ளுண்ணும் பழக்கம் சங்கத்தமிழரிடம் இருந்ததே அவா்தம் வீழ்ச்சிக்குக் காரணம்" எனக் குறிப்பிட்டுள்ளாா்.

திருக்குறளை அடுத்துத் தோன்றிய நீதி நூல்களும் கள் உண்ணும் பழக்கத்தைப் பழித்துரைப்பதைக் காணமுடிகிறது. கள்ளுண்பவன் பேச்சைக்கேட்டு நடப்பது இன்னாத செயல் (இன்னாநாற்பது.33). நல்ல வழி செல்லாதோர் செயலில் ஒன்று "கலம்மயக்கம் கள்உண்டு வாழ்தல்" (திரி.39:2) கள் உண்டு வாழ்பவன் குடி கெடும் (திரி.59:3) கள் குடிக்கும் இடத்திற்கு சான்றோர் செல்ல விரும்பமாட்டார் (ஆசார.55) கள் உண்பதை மனதாலும் நினைக்கக்கூடாது (ஆசார.37) அறவழியில் நடப்பவர் கள் உண்ணுதலைத் தவிர்ப்பர் (சிறுபஞ்.2) கள்ளைத் தவிர்த்தவருக்கு அறிவைத் தரும் நூல்கள் கூடத் தேவைப்படாது (ஏலாதி.14) கள்ளுண்ணாமை மன்னனுக்குரிய மிகச் சிறந்த தகுதியாகும் (ஏலாதி.18) "கள் உண்போன் சோர்வு இன்மை பொய்" என்னும் முதுமொழிக்காஞ்சி கூற்று கள் உண்பவனின் அறிவு மயங்கும் என்கிறது. சங்கம் மருவிய கால இலக்கியங்களின் இக்கூற்றுகள் கள்ளுண்ணாமை வலியுறுத்தப்பெற்றமைக்குச் சான்றாகின்றன.

**நிறைவாக…**

- உலகப்பொதுமறை எனப்புகழப்படும் திருக்குறளில் காமத்துப்பால் பகுதி அகமரபைப் பின்பற்றி எழுதப்பெற்றது. அதில் தலைமக்களின் ஊடலுக்கான காரணமாகப் பரத்தையைக் கூறாமல் தலைமக்களின் அன்பு மிகுதியை அவர்களின் ஊடலுக்கான காரணமாகக் காட்டி பரத்தமையை தவிா்ப்பதைக் காணமுடிகிறது.
- வீரத்தை ஆண்மையின் அடையாளமாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. திருக்குறள் ஆண்மையின் அடையாளமாக, "பிறன்மனை நோக்காத பேராண்மை" (குறள்.148) என்பது அவர் விரும்பும் சமூக மாற்றத்திற்குச் சான்றாகிறது.

- சங்க காலத்தை அடுத்து, வேற்று நாட்டவர் சமணம், பௌத்தம் போன்ற சமயக் கொள்கைகளோடு தமிழகத்தில் வாழ்ந்தனர். இல்லறம் போற்றி, வாழ்க்கை வாழ்வதற்கே என வாழ்ந்த அம்மக்களை அவர்தம் சமயக் கொள்கைகள் மாற்றமுயன்றன. துறவு வாழ்க்கையையும் அதற்கான விதிமுறைகளையும் சமண, பௌத்த சமயங்கள் பெரிதும் போற்றின.
- சமண சமயம் துறவை வலியுறுத்தியதால் அச்சமயம் சார்ந்தவர்களால் எழுதப்பெற்ற நாலடியார் வரைவின்மகளிரைக் கடுமையாக பழித்துரைக்கிறது. கற்புடைய பெண்களைச் சிறப்பித்துக் கூறுவதாக அமைந்த பகுதியும் அச்சமயம் சார்ந்த கொள்கையையே விவரிக்கிறது.
- சங்கம் மருவிய காலத்தில் எழுந்த நூல்கள் மக்கள் வாழ்க்கையில் மாற்றம் விளைவிக்க முனைந்தன. அகப்புற வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட நம் இலக்கியப் பொருண்மையை மாற்றின. அறத்தையும் மனித வாழ்க்கைக்கான விதிமுறைகளையும் பொருண்மையாகக் கொண்ட நீதி இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.
- நீதி இலக்கியங்கள் சமயக்கருத்துக்களை தனிமனித அறமாகவும், சமுதாய அறமாகவும் எடுத்துரைத்தன. எனவே கள்ளும், பரத்தையும் கூடாத பழக்கமாக மாற்றம் பெற்றன.

**துணைநூற்பட்டியல்**


1. அகநானூறு - ந.மு.வேங்கடசாமிநாட்டார், இரா.வேங்கடாசலம்பிள்ளை (உ.ஆ), திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 600018, 2007.
2. ஐங்குறுநூறு - பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ.), திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 600018, 2007.
3. கலித்தொகை - நச்சினார்க்கினியர் (உ.ஆ), திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 600018, 2007.
4. குறுந்தொகை - பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ.), திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 600018, 2007.
5. சமூகவியல்பார்வையில் அறஇலக்கியக் களஞ்சியம் - க.ப.அறவாணன், தமிழ்க்கோட்டம், அய்யாவு குடியிருப்பு, அமைந்தகரை, சென்னை – 600029, முதற்பதிப்பு 2008.
6. தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம் - டி.கே.இரவீந்திரன், விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை - 600002, முதற்பதிப்பு மே,2016.
7. தொல்காப்பியம் பொருளதிகாரம் - நச்சினார்கினியர் (உ.ஆ), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, இரண்டாம் பதிப்பு 2007.
8. பத்துப்பாட்டு - பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ.), திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 600018, 2007.

9. பதிற்றுப்பத்து - சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 600018, 2007.

10. புறநானூறு - சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 600018, 2007.